மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஏன் அதில் தலையிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? நன்றி சொல்லி பேசுவது தவறா? நன்றியோடு பேசுகிறார்கள். உட்காருங்கள்.*

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளாக மூடிக்கிடக்கும் இந்த ஆலையை அவர்கள் ஆட்சியில் மூடினார்கள். இந்த ஆலை மூடப்பட்டதால் பாதிக்கப்பட்டது ஒரிருவர் அல்ல. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அப்படி மூடிக்கிடந்த இந்த ஆலையை எல்லோரும் கைவிட்டு, இனி இந்த ஆலையைத் திறக்கவே முடியாது என்று மரண சாசனம் எழுதினார்கள். ஆனால், பூட்டிய பெட்டிகளை மீண்டும் திறந்து, கோப்புகளை தூசி தட் டி, மீண்டும் அந்தக் கோப்புகளுக்கு உயிர் தந்து, நிபுணர்களின் சாத்தியம் இல்லை என்ற அறிக்கையை தூர வைத்துவிட்டு, நிபுணர்களை அழைத்து இதை எப்படியாவது சாத்தியமாக்கித் தாருங்கள் என்று கட்டளையிட்டு, எப்படி மூன்று தினங்கள் கழித்து கல்லறையிலிருந்து ஏசுபிரான் திடீரென்று உயிருடன் திரும்பி வந்தாரோ, அதைப்போல இன்றையதினம் படாளம் சர்க்கரை ஆலைக்கு உயிரைத் தந்து, உயிர்ப்பித்துத் தந்த, வாழ்கின்றபோதே வரலாறாக மாறியிருக்கும் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய எண்ணங்களுக்கும், உணர்வுகளுக்கும் செயல்வடிவம் கொடுத்து மிகச் சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருக்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் ஒரு முறை நன்றியையும் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

5. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 9(1)—ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை பேரவையின் பதினான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்.*

திரு. மு. அப்பாவு

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. து. அமரமூர்த்தி

டாக்டர் க. நெடுஞ்செழியன்

திருமதி ரா. லீமா றோஸ்

திரு. சு. குணசேகரன்

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010–2011* ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதி நிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் பேசி முடித்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள்.

முற்பகல் *11–15*

திரு. செ.ம. வேலுசாமி, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரண்டுபேரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்பச் சொல்கிறேன், அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அத்தனையும் பரிசீலனையில் இருக்கின்றன. அவற்றை நான் பரிசீலனை செய்து எதை எதை எடுக்க வேண்டுமோ அதை எடுப்பேன். நீங்கள் சொல்வதையெல்லாம் எடுக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் இருவரும் நிற்கிறீர்கள். யாராவது ஒருவர் மட்டும் சொல்லுங்கள். மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள். உங்கள் குறை என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்ன சொல்லுங்கள்?